**நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பு வசதி செயற்திட்டம் - 2020**

நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பு வசதி செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் (உலக வங்கி) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 சனவரி 30 ஆம் திகதிய பி 4910 ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கை முற்பணத்தின் II ஆம் உறுப்புரையின் 2.05(இ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ் அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நிதியளிப்பு உடன்படிக்கை முற்பணத்தின் பிரகாரம் முன்னாள் நிதி மற்றும் ஊடக அமைச்சாகவிருந்த தற்போதைய நிதி அமைச்சின் கீழ் உள்ள தேசிய திட்டமிடல் திணைக்களம் செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு, விவசாய அமைச்சு மற்றும் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. கடனளிக்கும் முகவரின் நிதி உதவியின் கீழ் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் செயற்திட்டத்தின் தயாரிப்பு நடவடிக்கைகளிற்காக உதவுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 636 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 4.00 மில்லியனானதுடன் மொத்தத் தொகையும் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 சனவரி 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2020 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செலவினக் கூற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்கனுக்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம்

| இல. | கூறு | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | பொதுத் துறை வினைத்திறன் வலுப்படுத்தல் செயற்திட்டம் | 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை 09 செயற்திட்டங்களைத் தயாரிப்பதற்காக வசதியளிப்பதற்கு நிதி உதவி வழங்குவதே இச் செயற்திட்டத்தின் முக்கிய நோக்கமாக உள்ள போதிலும் அவற்றில் 3 செயற்திட்டங்கள் மாத்திரமே 2018 ஆம் ஆண்டில் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. ஒருங்கிணைந்த நீர் வழங்கல் மற்றும் நீர் வள முகாமைத்துவ செயற்திட்டத்திற்கான தயாரிப்புக்கள் கடந்த ஆண்டு தொடங்கப்பட்டதுடன் அணை பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும், நீர்ப்பாசனத்திற்கான நீர் விநியோக வலையமைப்புகளை மேம்படுத்துவதற்கும் 2021 இல் செயற்திட்ட உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன. மேலும், முன்னுரிமையின் பிரகாரம் அரசாங்க கொள்கைகள் மாற்றப்பட்டதன் விளைவாக 5 செயற்திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. 05 எதிர்பார்க்கப்பட்ட நன்கொடையாளர் நிதியுதவி செயற்திட்டங்கள் அரசாங்க கொள்கை முன்னுரிமைகளின் மாற்றத்தின் காரணமாக உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட காலப்பகுதியினுள் செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அணை பாதுகாப்பு மற்றும் நீர் வளத் திட்டமிடல் செயற்திட்டம் | | | |
| (இ) | மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டம் | | | |
| (ஈ) | இலங்கை சுகாதார முறைமை வலுப்படுத்தல் செயற்திட்டம் | | | |
| (உ) | உள்ளூர் அபிவிருத்தி உதவி செயற்திட்டம் | | | |
| (ஊ) | காலநிலை சிமாட் நீர்ப்பாசன விவசாய அபிவிருத்தி செயற்திட்டம் | | | |
| (எ) | அரச தனியார் பங்குடமை நிறுவக மற்றும் சட்டக் கட்டமைப்பை வலுப்படுத்துதல் | | | |

### 2.2 பயன்படுத்தப்படாத வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| கடன் வழங்கும் முகவரால் வழங்கப்பட்ட ரூபா 636 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 04 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த ஒதுக்கீட்டில் 9.75 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 87.6 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 0.39 மில்லியன் தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் பயன்படுத்தப்படாத மீதி கடன் வழங்கும் முகவரிற்கு மீளளிக்கப்பட்டிருந்தது. | இணங்கப்பட்டது. | நிதிகளை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு சரியான பொறிமுறையை உருவாக்கப்பட வேண்டும். |

## 2.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- |
| நீர்நிலைகள் மற்றும் நீர் வள முகாமைத்துவ செயற்திட்டத்தின் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு அலுவலகம் ரூபா 7.6 மில்லியன் கிரயத்தில் புனரமைக்கப்பட்டிருந்த போதிலும் பிஎம்யூ அலுவலகம் பின்னர் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டது. இதன் விளைவாக, மேற்படி செலவினங்கள் பயனற்ற செலவினங்களாக மாறியிருந்தன. | பிஎம்யூ அதன் இடத்தைப் பயன்படுத்தி அமைச்சு வளாகத்தில் அமைந்துள்ளது. பின்னர் குறித்த செயற்திட்டத்தின் பிஎம்யூ அரசாங்கக் கொள்கைக்கு இணங்க பின்னர் ஏற்படுத்தப்பட்ட தேவைப்பாடுகளின் அடிப்படையில் அதே அமைச்சின் மற்றொரு இடத்திற்கு மாற்றப்பட்டது. | செயற்திட்டத்தின் நோக்கெல்லை பின்பற்றப்பட வேண்டியதுடன் செயற்திட்ட நிதி வினைத்திறனாகவும் சிக்கனமாகவும் முகாமை செய்யப்பட வேண்டும். |